# மதுரையில் மதவெறியைத் தூண்டிய மாநாடு! மத நல்லிணக்கமே தமிழர் மரபு!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில்–பேராசிரியர் அருணன் உரை!

**திருச்சி, ஜீன் 28-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 'இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம்' மற்றும் திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் நடத்திய 'இளைஞர்கள் கருத்தரங்கம்'நிகழ்வில் 'மதநல்லிணக்கம் தமிழர் மரபு' எனும் தலைப்பில், 'தமிழ்நாடு மக்கள் ஒற்றுமை மேடை' ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அருணன் நிகழ்த்திய உரை வருமாறு:**

இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் திருச்சியில் நடைபெறும் இளைஞர்கள் கருத்தரத்தை தலைமையேற்று நடத்தும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் "தேசிய கல்விக்கொள்கை 2020 எனும் மதயானை" என்ற நூலினை எழுதி வெளியிட்டு இருக்கிறார். இப்படியொரு நூல் வெளியாகும் என நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இந்திய ஒன்றிய அரசு உருவாக்கி, செயல்படுத்தும் தேசியக் கொள்கையை எதிர்த்து ஒரு மாநிலத்தின் கல்வி அமைச்சர் நூலினை எழுதி இருக்கிறார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தின் கல்வி அமைச்சரும் செய்யாத பணி அது. இதை யாரும் அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இதற்கே பெரிய துணிவு வேண்டும்.

ஒன்றிய அரசு சொல்லும் அந்த கல்விக் கொள்கை, படுமட்டமான கல்விக் கொள்கை. நான் ஒரு மாநில கல்வி அமைச்சர் என்றாலும், அதை அக்குவேர் ஆணிவேராக பிரித்துப்போட்டு அம்பலப்படுத்துவேன் என கிளம்பினாரே ஒரு கல்வி அமைச்சர், அது தமிழனுக்கு கிடைத்த பெருமை. இந்தியாவுக்கே வழிகாட்டும் துணிவுமிக்கச் செயல். எனவே அனைவரின் சார்பில் அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தான் கல்வி அமைச்சராக தொடர்ந்து மாணவராகவும் இருந்து பி.எச்டி படிப்பினை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் படித்து வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அவர் விரைவில் முனைவர் பட்டம் பெற பாராட்டுகிறேன். ஏனென்றால், மற்ற மாநிலங்களைப் பற்றி தெரியவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் கல்வி அமைச்சராகியும் முனைவர் பட்டத்திற்கு படித்துக் கொண்டிருக்கும் ஒரே அமைச்சர் இவராகத்தான் இருப்பார்.

### "கலைஞர் பாணி"

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவோடு சேர்த்து நடைபெறும் இந்த கருத்தரங்கில் "மதநல்லிணக்கம் தமிழர் மரபு" என்ற தலைப்பில் நான் பேச இருக்கிறேன். கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, முழு இந்தியாவுக்கும் வளர்ச்சி தரக்கூடியதாக சேது சமுத்திர திட்டம் என்ற அருமையான திட்டத்தை அமல்படுத்த வேண்டுமெ என்றார். ஆனால் அதனை ஒரு கற்பனையைச் சொல்லி, புராணக்கதையைச் சொல்லி சங் பரிவாரக் கூட்டத்தினர் கெடுக்கப்பார்த்தார்கள். அதுகுறித்து நிருபர்கள் கலைஞரிடம் கேட்டபோது அவர் இயல்பாக சொன்னார், ராமர் எப்படி பாலம் கட்டியிருக்க முடியும் என்றார். உடனே வடக்கிலிருந்து ஒரு சாமியார், கலைஞரின் தலையை சீவுவோம் என்று சொன்னார். அதற்கு கலைஞர், தன்னுடைய தலையை தடவிக்கொடுத்துக் கொண்டே சொன்னார், 'நான் என்னுடைய தலையை சீவியே பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது' என்று. இதுதான் கலைஞர் பாணி.

யாரோ ஒருவர் நம்மை கொலை செய்து விடுவேன் என்று சொன்னால் நமக்கு எவ்வளவு கோபம் வரும். ஆனால் சர்வசாதாரணமாக கலைஞர் எதிர்கொண்டார். அந்த துணிச்சல் தான் தமிழ்நாட்டை இன்றைக்கு இந்தியாவுக்கே வழிகாட்டும் அளவுக்கு உயர்த்தி இருக்கிறது.

இந்தியா பல்வேறு தேசிய இனங்களை கொண்ட நாடு. அதில் தொன்மையான தேசிய இனம் தமிழினம். தமிழின் தொன்மை எத்தகையது என்பதை கீழடி அகழாய்வுகள் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகள் வந்து கொண்டிருக்கின்றன. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை பயன்படுத்தி இருக்கிறோம் என்றெல்லாம் ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால் இயல்பாக நம்முடைய தமிழை, தமிழ் பண்பாட்டை, தேசிய இன அருமை பெருமைகளை 1953ஆம் ஆண்டிலேயே வெளிப்படுத்தியவர் கலைஞர். இதே திருச்சி மாவட்டத்தில் இருந்த கல்லக்குடி என்ற ஊருக்கு டால்மியாபுரம் என்ற பெயரை வடக்கே இருந்து வந்த பெருமுதலாளி ஒருவரின் பெயரை மாற்ற முயன்றார்கள். அப்போது மிகப்பெரிய ரயில் மறியல் போராட்டத்தை நடத்தியவர் கலைஞர். இதுவொரு மிகப்பெரிய தமிழ் தேசிய உணர்வு; கல்லக்குடி தமிழ்தேசியம்.

### பனைமரத்திற்குப் படிக்கட்டு

ஆனால் இப்போது ஒருவர் தமிழ் தேசியம் என்று கிளம்பி இருக்கிறார் அது "கள்ள" "குடி" தமிழ்தேசியம்! அவர் பனைமரத்திற்கே படிக்கட்டு கட்டிய நபர். எனக்குத் தெரிந்து பனைமரத்திற்கு படிக்கட்டு கட்டி ஏறிய ஒரே கோஷ்டி அந்த கோஷ்டி தான். இவர்களெல்லாம் தமிழ்தேசியவாதிகள் அல்ல. தமிழ் தேசிய "வியாதி"கள்!

அதேநேரம், நாம் இந்திய ஜனநாயகத்தை மீட்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மதுரையில் ஒரு மாநாடு எந்த அளவுக்கு கோரமாக நடந்தது என்பதை பார்த்தோம். மதுரையை இந்த அளவுக்கு கெடுக்கப் பார்க்கிறார்களே என்று ரொம்ப வேதனையாக இருந்தது.

மாணவச் செல்வங்களே, இளைஞர்களே ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும்... மதவெறி நிகழ்ச்சிகள் எல்லாம் உத்தரப்பிரதேசத்தில், மஹாராஷ்ட்ராவில், மத்தியப்பிரதேசத்தில் நடக்கும்! ஆனால் அது இன்றைக்கு மதுரை வரை வந்துவிட்டது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் மரபு என்ன? வரலாறு என்ன? அது மதநல்லிணக்கம் சார்ந்தது. நம்முடைய சங்க இலக்கியத்திலேயே மத வழிபாட்டில் பன்மைத்துவம் உண்டு. அன்றைக்கு தமிழன் நடுகல்லை வழிபாடாக முன்னோரை வணங்கி இருக்கிறான். கொற்றவை தாயை வழிபட்டுள்ளான். முருக வழிபாடு உண்டு. அப்போதே மூன்றும் இருந்துள்ளன.

மணிமேகலை காப்பியத்தில் ஒரு அத்தியாயம் வரும், 'சமய கணக்கர்தம் திறம் கேட்ட காதை". சமயம் என்கிற வார்த்தை தான் இருக்கிறதே தவிர மதம் என்கிற வார்த்தைகூட இல்லை. சமயக்கணக்கர்கள் என்பதற்குள் போய் பார்த்தால் சைவம், வைணவம், சமணம், பவுத்தம், வேதம் ஆகியவை தான் உள்ளன. அப்போது இந்து மதம் என்பதே இல்லை. இந்த பல்வேறு வகையான சமய கணக்கர்களிடம் பவுத்த வாதியான மணிமேகலை வாதம் செய்துள்ளார். இதுதான் தமிழரின் பன்மைத் தன்மை. அன்றில் இருந்து இன்றுவரை



இப்படித்தான். எத்தனை எத்தனை சமயங்கள், தெய்வங்கள் என எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டவன் தமிழன்.

இன்றைக்குக்கூட பாருங்கள், சாதாரணமாக மதுரையில் இருந்து தஞ்சை பகுதிக்குச் சென்றால் முதலில் எட்டுக்குடி முருகன் கோவிலுக்குச் செல்வார்கள். அடுத்து வேளாங்கண்ணி மாதா கோவிலில் வழிபாடு, அடுத்த நாகூர் தர்காவுக்கும் அவசியம் செல்வார்கள். இன்றைய மொழியில் சொல்ல வேண்டும் என்றால் அப்படிச் செல்பவர்கள் அனைவருமே இந்துக்கள். 'எந்தச் சாமியாவது காப்பாற்றட்டுமே' என்கிற எண்ணம் தான். இதுதான் தமிழனின் பண்பு; தமிழன் மரபு. அனைத்து மதங்களோடும் தமிழன் இணக்கமாக இருந்ததால் மதநல்லிணக்கம் பேணப்பட்டது.

ஆனால் இந்த மரபுக்கு நேர் எதிராக நடந்தது தான் மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாடு. இதைத்தான் இளைஞர்களும், மாணவர்களும் மனதில் ஏந்த வேண்டிய விஷயம். முருக பக்தர்கள் மாநாடு என்கிற பெயர் எல்லாம் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் மாநாட்டை நடத்தியது யார்? இந்து முன்னணி! ஆனால் மாநாட்டிற்கு முகூர்த்தக்கால் நட்டியது யார் என்றால் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர். ஆனால் அவரே சொல்கிறார் இதற்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை என்று. வேடிக்கையாக இல்லையா?

மாநாட்டுக்கு ஆள் திரட்ட ஒவ்வொரு மாவட்டமாக சென்றார் பாஜக மாநில தலைவர். ஒரு மாவட்டத்தில் பேசுகிறார், மதுரையில் நடக்கும் மாநாட்டின் எதிரொலி சென்னை கோட்டையில் எதிரொலிக்கும் என்று. 'திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா, திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்' என்றால் நியாயம்! சென்னை ஜார்ஜ் கோட்டையில் எதிரொலிக்கும் என்றால் அதில் என்ன இருக்கிறது? முழுக்க முழுக்க அரசியல் தானே என்று முன்பே நினைத்தேன். அதேபோல அரசியல் மாநாடாகவே அது நடந்து முடிந்தது. அதுவும் கூட்டணி அரசியல் மாநாடு. அந்த மாநாட்டில் இந்து முன்னணி தலைவர்கள் பேசினார்கள். அடுத்து தமிழ்நாடு பா.ஜ.க.வின் இந்நாள், முந்நாள் தலைவர்கள் பேசினார்கள். அடுத்து ஆந்திராவைச் சேர்ந்த ஜன்சேனா கட்சித் தலைவர் பேசினார். அதிமுக தலைவர்கள் கலந்து கொண்டார்கள். இப்படி கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பங்கேற்ற மாநாட்டை பக்தர்கள் மாநாடு என்கிறார்கள்.

இதில் மதவெறியை பரப்புவார்கள் என்பதால் தான் முதலில் அனுமதி தர அரசு மறுத்தது. எனவே நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றமும் இவர்களின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு 52 நிபந்தனைகளோடு அனுமதி கொடுத்தார்கள். உலகில் எந்த மாநாட்டிற்காவது இத்தனை நிபந்தனைகளோடு அனுமதி கிடைத்திருக்குமா? முக்கியமான நிபந்தனையாக அரசியல் பேசக்கூடாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டு இருந்தது. ஆனால் அதையும் மீறி, நீதிமன்றம் சொன்னால் சொல்லட்டும், நாம் நம்முடைய வேலையை கட்டுவோம் என்று அரசியல் பேசிவிட்டு, 6 தீர்மானங்களை வேறு நிறைவேற்றி இருக்கிறார்கள். பேச வேண்டிய பிரச்சனைகள் எல்லாம், நாட்டில் இருக்கும் கல்விப்பிரச்சனை, வறுமைப் பிரச்சனை, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் என எத்தனையோ உள்ளன. ஆனால் முருக பத்கர்கள் மாநாடு என்ற பெயரில் மத வெறியை தூண்டும், பிற மதங்களின் மீது வெறுப்பைத் தூண்டும் வேலையை செய்து உள்ளார்கள். இந்து வாக்கு வங்கி என்றால் என்ன அர்த்தம், பிற மதத்தினரை ஒதுக்கி வைக்கிறோம் என்று தானே அர்த்தம். அப்படியென்றால் அவர்கள் எல்லாம் இந்தியர்கள் இல்லையா? தமிழர்கள் இல்லையா? வெளிப்படையாக இப்படி பேசுகிறார்கள் என்றால் இத்தகைய தீய சக்திகளின் கோரமான சக்திகளின் ஆபத்தை மாணவர்களும், இளைஞர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த தீய சக்திகள் அதிகமானால் தமிழ்நாடு உத்தரப்பிரதேசமாக மாறக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும்.

### அறிஞர் அண்ணாவுக்குத் துரோகம்

இந்த மாநாட்டில் அ.தி.மு.க.வில் இருந்து சிலர் போய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் இதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்களா? இதுதான் அண்ணா சொன்ன கொள்கையா? இதுதான் திராவிடமா? இல்லவே இல்லை. அவர்கள் எல்லாம் அண்ணாவுக்கு துரோகம் செய்கிறார்கள். திராவிட சிந்தனைக்கு மிகமிக மோசமான துரோகம் செய்கிறார்கள். கேட்டால், இப்படியெல்லாம் நடக்கும் என எங்களுக்கு தெரியாது! என்கிறார்கள். ஏன்யா, பாஜகவும், இந்து முன்னணியும் மாநாடு நடத்தினால் இப்படித்தானே நடக்கும்! அங்கு என்ன பஞ்சாமிர்தமா கொடுப்பார்கள். இப்படிப்பட்ட அரசியலைத்தானே தருவார்கள்.

ஆனால் அந்த மாநாடு நடப்பதற்கு முன்பாக மதுரையில் தி.மு.க கூட்டணியைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார்கள். அதில் தெளிவாக சொன்னார்கள், 'நடக்க இருக்கும் மாநாடு கடவுள் பக்தியால் அல்ல; கலவர புத்தியால் தான்' என்று. இதை அந்த அதிமுக முன்னாள் அமைச்சர்கள் படித்துப் பார்த்திருக்க மாட்டார்களா? தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு பெரிய சாதனையை செய்திருக்கிறது. ஆனால் அதையெல்லாம் புறம்தள்ளி, அதர்மத்தை ஒலிக்க வேண்டும் என்ற குரலில் பெரியார், அண்ணா, கலைஞரை காண்பிக்கிறார்கள். அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு வேறு. இதற்கு பேசாமல் கட்சியின் பெயரையாவது மாற்றிக் கொண்டுப் போகலாம்.

ஆந்திராவில் இருந்து துணை முதலமைச்சர் என்று ஒருவர் வந்து அந்த மாநாட்டில் பேசுகிறார், 'இங்கே முஸ்லீமாக இருந்தாலோ, கிறிஸ்தவராக இருந்தாலோ பிரச்சினையில்லை. இந்துவாக இருந்தால் தான் பிரச்சினை" என்று. எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்படி இந்துவாக இருக்கும் யார் எங்கு பிரச்சினையோடு இருக்கிறார். அடுத்ததாக இன்னும் கொடூரமான ஒன்றைச் சொன்னார், 'இதேபோல அரேபியாவில் இருந்து வந்திருக்ககூடிய மதத்தை விமர்சனம் செய்வீர்களா" என்று கேட்கிறார். இதில் தான் மதக்கலவரத்தை தூண்டுகிற கொடுமை இருக்கிறது. இதுக்காக ஆந்திராவில் இருந்து ஆளைக் கூட்டிட்டு வந்திருக்கிறார்கள். முழுக்க முழுக்க நம்முடைய முற்போக்கு சிந்தனைக்கு திராவிட இயக்க சிந்தனைக்கு பொதுவுடமைச் சிந்தனைக்கு எதிரானது.

முருக பக்தர்கள் மாநாட்டில் போட்ட தீர்மானங்களில் ஒரே ஒரு தீர்மானம் மட்டுமே முருகனைப் பற்றியது. அதுவும் திருப்பரங்குன்றம் முருகனுக்கே சொந்தமானது என்று. மதுரைக்காரனான நான் சொல்கிறேன், ஆம் குன்றம் முருகனுக்கும் சொந்தம். சிக்கந்தருக்கும் சொந்தம், கருப்பசாமிக்கும் சொந்தம். அனைத்து தமிழர்களுக்கும் சொந்தம். இதில் ஏன் குழப்படி வேலை பார்க்க நினைக்கிறார்கள். கேட்டால், சிக்கந்தர் தர்காவில் ஆடு, கோழி வெட்டுகிறார்களாம். அந்த நேர்த்திக்கடன் செய்பவர்களில் இந்துக்களும் தான் இருக்கிறார்கள். அதேபோல குன்றத்திற்கு பின்பக்கம் இருக்கும் கருப்பசாமிக்கும் தான் ஆடு, கோழி வெட்டப்படுகிறது. அப்படியென்றால் சிக்கந்தருக்கு வெட்டக்கூடாது என்று மட்டுமல்ல, கருப்பசாமி கோவிலுக்கும் வெட்டக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், கருப்பசாமிக்கு கோழி அறுத்து, ஆடு வெட்டி படைத்து, படையலிட்டு சாப்பிடும் நாங்கள் இந்துக்கள் இல்லையா? இப்படித்தான் ஜெயலலிதா அம்மையார், சிறுதெய்வ கோவில்களில் கோழி, ஆடு வெட்டக்கூடாது என்று ஒரு சட்டத்தை போட்டது. அடுத்த தேர்தலில் அந்த அம்மையாரின் செல்வாக்கை மக்கள் வெட்டினார்கள். உடனே அந்த உத்தரவை திரும்பப்பெற்றார்கள். எனவே தான் சொல்கிறோம் இந்து முன்னணி என்பது இந்து விரோத முன்னணி. நம்முடைய பன்மைத் தன்மையை கெடுக்க நினைக்கும் முன்னணி.

முருகன் தமிழ்க்கடவுள் என்கிறோமே, சங்க இலக்கியமும் அதை சொல்கிறது. அதை கற்பனை என்று ஒரு காலத்தில் சொன்னார்கள். ஆனால் அவையெல்லாம் உண்மை தான் என்பதை இன்றைக்கு கீழடி அகழாய்வுகள் உணர்த்துகின்றன. ஆனால் எங்கு போனாலும் தமிழ் தமிழ் என்று பேசும் பிரதமர் கீழடி அகழாய்வு அறிக்கையை ஏற்க மறுக்கிறார். அந்த அகழாய்வை நடத்திய தொல்லியல் ஆய்வாளரை இடமாற்றம் செய்து பந்தாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி என்றால் மதுரையில் உண்மையிலேயே முருக பக்தர்கள் மாநாடு தான் நடந்தது என்றால், அதில் கீழடி அகழாய்வு அறிக்கையை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டிருக்க வேண்டுமல்லவா!

எனவே தான் இந்த சதிகார கூட்டத்தை எதிர்த்து முறியடிக்க, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்திருக்கும் அறைகூவல், 'தமிழா தமிழன் என்கிற அடிப்படையில் கிளர்ந்தெழு, அப்பொழுது தான் இந்த கூட்டத்தை முறியடிக்க முடியும்' என்று சொல்லி இருக்கிறார். அதை இளைஞர்களும், மாணவர்களும் புரிந்து கொண்டு சதிகார கூட்டத்தை முறியடிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் அருணன் உரையாற்றினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிரணி சார்பாக திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபம் அருகில் ஆயிரத்து இருநூறு பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன், மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் ஏற்பாட்டில் வழங்கினார். உடன் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் சிவகாசி த. வனராஜா, திருப்பரங்குன்றம் பகுதி செயலாளர் கிருஷ்ணபாண்டியன் உள்ளிட்ட பகுதி கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், கழக ஒன்றிய செயலாளர்கள் மற்றும் நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,மகளிரணி மற்றும் தொண்டரணி நிர்வாகிகள், மண்டல தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட நகராட்சி ஒருங்கிணைந்த வார்டு செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. 100 சதவீதம் வெற்றி பெற்று மீண்டும் 7 ஆவது முறையாக தி.மு.க. தலைவரை முதல்வராக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இராமநாதபுரம் தனியார் மகாலில் இராமநாதபுரம் சட்டப் பேரவை தொகுதியில் உள்ள இராமநாதபுரம்,ராமேசுவரம்,கீழக்கரை ஆகிய ஒருங்கிணைந்த நகராட்சி வார்டு செயலாளர்கள் பா முகவர்கள் (பி. எஸ்.ஏ. 2) ஆலோசனைக்குகூட்டம் மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில், 133 பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், பேசிய மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் கடந்த முறை எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டப்பேரவை தொகுதியில் தி.மு.க. மூன்று இடங்களிலும், காங்கிரஸ் ஒரு இடம் என நான்கு தொகுதியில் 100 சதவீதம் வெற்றி பெற்றோம். வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் கடந்த முறை 100 சதவீதம் வெற்றி பெற்றதை போல வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் மீண்டும் 100 சதவீதம் வெற்றி பெற்று தமிழகத்தில் 7 ஆவது முறையாக திமுக தலைவரை முதல்வாக்க ஒன்றிணைந்து செயல் பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அகமது தம்பி,மாவட்ட நிர்வாகிகள் குணசேகரன், ரவிக்குமார், சுரேஷ் மற்றும் நகர் கழக செயலாளர்கள் ஆர்.கே.கார்மேகம், பிரவீன்தங்கம், கே.இ.நாசர்கான், பசீர், இளைஞரணி நிர்வாகி சுல்தான் மற்றும் நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.